Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ 1-25

கடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ தை மீ 27 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 10 (09-02-1987) UTHAYAM A LIVELY TAMIL DAILY கதிர் 63

A/L 87
நடைபெறுகிறது
Physical Chemistry
ஆசிரியர்:
திரு. தில்லைநாதன்
New Master
INSTITUTE
B. M.C. Lane,
JAFFNA.

A/L 87
Physics
Current Electricity
ஆரம்பம்: 01-02-1987
ஆசிரியர்:
திரு. வர்ணம்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

# 27 சிங்களவர் அம்பாறையில் வெட்டிக் கொலை!

கொழும்பு, பெப். 9 அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரம்பாவல என்னும் சிங்களக் கிராமத்தில் 27சிங்களவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர்

5 பெண்கள், 10 சிறுவர்கள், 12 ஆண்கள் ஆகியோரையே இனந் தெரியாதநபர்கள் வெட்டிக் கொன்றனர் என்று பொலிஸார் அறிவித்தனர்.

ஒரு நபரும் ஒரு குழந்தையுமே இத்தாக்குதலில் உயிர்தப்பினர்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்தில் இரண்டு சிங்களக் கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 12 சிங்கள மக்கள் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே (இ-எ)

## கிளிநொச்சி ஊடாக பயணிகள் வாகனங்கள் வருவதற்குத் தடை

யாழ்ப்பாணம், பெப். 9 யாழ்ப்பாணம், கிளிநொச்சி என்ற பெயர்ப் பலகைகளுடன் கொழும்பில் இருந்தோ அல்லது வவுனியாவில் இருந்தோ அரச, தனியார் பயணிகள் வாகனங்கள் எதுவும் போக்குவரத்து நடத்த முடியாது.

இவ்வாறு வவுனியா இராணுவ அதிகாரிகள் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்த உத்தரவு அரசாங்கத்தால் விடுக்கப்பட்ட புதிய உத்தரவு எனவும் வவுனியா இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து நேற்று பல வாகனங்கள் முல்லைத்தீவு என பெயர் பலகை போட்டபடி முல்லைத்தீவு ஊடாக யாழ்ப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# திருப்பி அனுப்பப்படும் தமிழருக்கு பாதுகாப்பில்லை




யாழ்ப்பாணம் என்ட சொல்லைக் கண்டாலே அவைக்குப் பயம் வருகுதோ அல்லது எரிச்சல் வருகுதோ...? அவையிட்டைதான் கேக்க வேணும்.

## சுவிஸ் அரசிடம் எடுத்துச் சொல்வோம் — பத்திரிகையாளர்

— அலுவலகச் செய்தியாளர்; எஸ். ஜே பி ரட்ணதுரை —

யாழ்ப்பாணம்; பெப்ரவரி 9

வெளிநாடுகளில் புகலிடம் கோரி,இலங்கை திரும்பும், திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளுக்கு போதிய பாதுகாப்பு இல்லாததை நாம் கண்டு தெரிந்து உள்ளோம்.

இந்த நிலையை சுவிஸ் அரசுக்கு பத்திரிகை வாயிலாகத் தெரிவிப்போம்.

யாழ்ப்பாணம் வந்த இரண்டு சுவிஸ் பத்திரிகையாளர்களில் ஒருவரான ஹியுகோ ருெமெயின் உதயன் செய்தியாளரிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டுநாள் விஜயத்தின் முடிவில் சுவிஸ் பத்திரிகையாளர்களில் ஒருவரான ஹியுகோ ருெமெயின் செய்தியாளர் பேட்டிகண்டார்.

அவர் சொன்னதாவது:-

சுவிஸில் தற்சமயம் 4,200 இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர்.

எமது நாட்டுச் சட்டத்தின்படி அவர்கள் உண்மையிலேயே அகதிகள் என்று உறுதியாக்கப்படாத பட்சத்தில் அரசு அவர்களை நாட்டைவிட்டு வெளியேறும்படி கேட்டுக்கொள்ளும். அதற்கான காலக்கெடு அவர்களுக்கு வழங்கப்படும்.

அதற்கிடையில் அவர்கள் வேறு ஏதாவதுநாடு ஒன்றுக்குச் சென்றுவிட வேண்டும். இல்லையேல் அரசு அவர்களைப் பிடித்து இலங்கைக்கு அனுப்பும்.

### அரசின் நிலை

எமதுஅரசாங்கத்தைப் பொறுத்த வரையில், தென் இலங்கையில் தமிழருக்குப் பாதுகாப்பு உண்டு என்று அது கருதுகிறது

இதனால் தென் இலங்கையுடன் தொடர்புடைய தமிழ் அகதிகளையே சுவிஸ் அரசு இப்போது திருப்பி அனுப்புகிறது.

70சத வீதமான சுவிஸ் மக்கள் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாகவே உள்ளனர்.

அவர்கள் கருத்தைமீறி தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு நடவடிக்கை எடுக்கமாட்டாது — இப்படி சுவிஸ் பத்திரிகையாளர் சொன்னார். (அ-எ-5)

## விடுதலைப்புலி போராளிகள் மூவர் மரணம்

யாழ்ப்பாணம்,பெப் 9 மன்னார்ப் பகுதியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சிப்பாய்கள்—புலிகள் நேரடி மோதல்களின் போது மூன்று விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்

(4ஆம் பக்கம் பார்க்க)

சித்திரவதைக்கு உள்ளான

## வல்வை இளைஞரை சுவிஸ் பத்திரிகையாளர் பேட்டி கண்டார்

யாழ்ப்பாணம், பெப். 9 சுவிஸில்இருந்து பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்டு கொழும்பு பொலிஸாரினால் சித்திரவதை செய்யப்பட்ட வல்வெட்டித்துறைத் தமிழ் இளைஞரின் பயங்கர அனுபவங்களை யாழ் வந்த சுவிஸ் பத்திரிகையாளர் குழு நேற்றுநேரில்கேட்டு அறிந்து கொண்டது.

இச் சந்திப்பு சுவிஸ் பத்திரிகையாளர் தங்கி இருந்த ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

வல்வெட்டித்துறை இளைஞரான கிருஷ்ணபிள்ளை துரைராசாவின் இதுசம்பந்தமான பேட்டி கடந்த வெள்ளிக்கிழமை

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

09-02-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:
12. 35 முதல் 2.05வரை
ராகுகாலம்:
8 05 முதல் 9 35 வரை
கண்ணப்பர் குருபூசை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்

786

திறப்பு விழா அழைப்பு

எல்லாம் வல்ல இறைவனருளால்

9-2-1987 இன்று

பகல் 12 35 மணியில் இருந்து 2·05 மணி வரையிலான சுபநேரத்தில்

எம்.ஆர். ஜுவல் ஹவுஸ்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்துநடாத்த இருப்பதால் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
தங்கள் நல்வரவை விரும்பும்
எம். ஆர். ஜுவல் ஹவுஸ் ஸ்தாபனத்தார்

எம். ஆர். ஜுவல் ஹவுஸ்
68 B-31. கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:- எம்பயர் தியேட்டர்.

## வதிரியில் கண்ணகை அம்பாள் மஹாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,பெப் 9 வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது

இன்று காலை 7மணிக்கு யாகபூஜையுடன் ஆரம்பமாகி காலை 9.15 க்கும் 10 30 க்கும் இடையில் வரும் மீன லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

நவாலியூர் பிரதிஷ்டா சிரோன்மணி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள், நல்லூர் நியாய சிரோன்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஆகியோர் உட்பட பல குருமார்கள் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

### அன்பான வாசகர்களே!

பத்திரிகை அச்சிடும் தாள் விலை உயர்வு, போக்குவரத்துச் செலவின உயர்வு என்பன காரணமாக உங்கள் அபிமான நாளிதழ் உதயனின் விலையை இன்று தொடக்கம் 25 சதத்தால் அதுகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதுவரை காலமும், ஆகு செலவைவிடக் குறைந்த விலையில் உதயனை உங்களுக்கு வழங்கி வந்தோம்.

இப்போதைய நெருக்கடியில் அவ்வாறு தொடர்ந்தும் செய்ய முடியாத நிலையில் — எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் — 25 சதத்தை யாவது விலை உயர்த்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

நிலைமையை உணர்ந்து எமக்கு ஆதரவளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— நிர்வாகிகள்

## யாழ்நகரை சுடுகாடாக்கி விடுவார்களாம்

யாழ்ப்பாணம், பெப். 9 இராணுவம் நினைத்தால் கோட்டையில் இருந்தபடி அரை மணித்தியாலத்துக்குள் யாழ் நகரை சுடுகாடாக்க முடியும். ஆனால் பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதாலேயே இராணுவம் அப்படி நடந்துகொள்வதில்லை

இவ்வாறு பலாலி முகாம் பிரிகேடியர் தம

(4ஆம் பக்கம் பார்க்க)

## நினைத்தால் ஆயிரம் சிங்களவரை கொழும்பில் நாம் கொல்லலாம்

### ஆனல் அப்படிச் செய்ய மாட்டோம்

### என்கிறுர் பாலகுமார்

யாழ்ப்பாணம், பெப். 9 நாம் நினைத்தால் ஒரு நிமிடத்தில் ஆயிரக்கணக்கான சிங்களவர்களைக் கொழும்பில் கொல்லலாம். ஆனால் அது எமது போராட்டத்திற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் தடைகளைக் கொண்டு வரும்.

ஈரோஸ் இயக்கப் பிரமுகரான திரு. வி. பாலகுமார் சுவிஸ் பத்திரிகையாளர் திரு ஹியுகோ ருெமெயினிடம் இப்படித் தெரிவித்தார்.

இருநாள் விஜயம் மேற்கொண்டு யாழ் வந்த சுவிஸ் பத்திரிகையாளர் ஈரோஸ் பிரமுகர் திரு. பாலகுமாரை அவரது முகாமில் தமது படப்பிடிப்பாளருடன் நேற்று சந்தித்தார்.

சிங்கள பொதுமக்களை போராளிகள் கொல்கி[illegible] என்று சுவிஸ் பத்திரிகையாளர் கேட்ட போதே பாலகுமார் மேற்கண்டவாறு கூறினூராம்.

சிங்கள பொதுமக்கள் கொலை செய்யப்படும் நிகழ்வுகள் கண்டிக்கப்பட வேண்டியவை.

இது எமது போராட்டத்தை சர்வதேச ரீதியிலும், எம்மை புரிந்து கொண்ட சிங்கள முற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரத்தில் 5 விடுதலைப் புலிகள் வீர மரணமடைந்தனர்

யாழ்ப்பாணம், பெப் 9 கடந்த சனிக்கிழமை உருத்திரபுரம் பகுதியில் நடைபெற்ற சிப்பாய்கள் புலிகள் நேரடி மோதலில் ஐந்து விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

இத்தாக்குதலின்போது

(4ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் கனன்சார்ஜ் தாக்குதல்

## பரப்புக்கடந்தானில் 4 சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், பெப் 9 மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நேற்று நடைபவனி மேற்கொண்ட சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் கனன்சார்ஜ் தாக்குதல் நடத்தினர்;

இதன்காரணமாக நான்குசிப்பாய்கள் அந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ மகாபொல மாணவர் யாழ் வந்தனர்

யாழ்ப்பாணம்,பெப் 9 மகாபொல புலமைப் பரிசில்களைப் பெறுவதற்காக கொழும்பு சென்ற மாணவர்கள் நேற்று இரவு 11மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்

இவர்கள் பயணம் செய்த வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் மூன்று பஸ்களும் தடங்கலின்றி யாழ்ப்பாணம் வர அனுமதிக்கப்பட்டது. இவர்களுடன் வவுனியாவிலிருந்து வ. பி போ.சபையின் இன்னும் ஒரு பஸ்ஸும் பயணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பிலிருந்து

## யாழ். வந்த பஸ்ஸில் இரு இளைஞர் கைது

யாழ்ப்பாணம், பெப். 9 மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் பயணம் செய்த இரண்டு தமிழ் இளைஞர்கள் புணானையில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் இருந்து காலை இந்த பஸ் புறப்பட்டது

ஆயுதப் படையினர் புணானையில் பஸ்ஸை

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து வந்த லொறியில் பொருள்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், பெப். 9 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு லொறி மூலம் வந்த சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வென்னப்புவ பகுதியில் ஆயுதந்தாங்கிய கோஷ்டியினரால் கொள்ளை அடிக்கப்பட்டன.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த [illegible] ருக்குச் சொந்தமான லொறி ஒன்றில் சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் ஏற்றப்பட்டு வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது.

வென்னப்புவவில் லொறி வந்துகொண்டிருந்த பொழுது லொறி முன்பாக ஹைஏஸ் வான் ஒன்று கொண்டுவந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

மங்களகரமான

புதுக் கடைத் திறப்பு விழா

'சௌபாக்கியாஸ்'

CHOWBAKIYAS

நிகழும் அக்ஷய வருஷம் தைத்திங்கள் 27-ம் நாள் 09-02-1987 திங்கட்கிழமை காலை 11-00 மணி முதல் 12-00 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மேற் குறிப்பிட்ட ஜவுளி மாளிகையை திறந்து வைக்க நிச்சயித்துள்ளோம்.

அத்தருணம் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

22(63), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**உதய சங்கற்பம்**

கட்டுப்பாடு இல்லாமல் வாழ்கின்றவன் கௌரவம் இல்லாமல் சாவான்

— ஐஸ்லாந்துப் பழமொழி

உதயன்

இல, 15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 09-02-1987 த.பெ.இல. 23

# வாழ்வும் நோயும்

எமது மக்களில் பலர் நோயாளிகளாகவே இருக்கிறார்கள். நோய் எதுவும் இல்லாத சுகதேகி என்ற கணக்கில் எடுக்கக் கூடிய வர்கள் நூற்றுக்குப் பத்து வீதமேனும் இருப் பார்களோ என்பது சந்தேகமே.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல் வம்" என்ற முதுமொழி நூற்றுக்கு நூறு வீதம் உண்மை என்பதை நோயாளிகள் மட்டுமன்றி, நோய் காணாதவர்களும் ஒப் புக்கொள்வர்.

நோயைவிட மனநோயைத் தருவது ஆஸ்பத்திரி வாழ்க்கை. ஒருநாள் ஆஸ்பத் திரியில் தங்குவது ஒரு வருடத்துக்கு சிறைத் தண்டனை அனுபவிப்பதை விட வேதனை யானது.

ஆனால் எமது பகுதிகளில் உள்ள அர சாங்க ஆஸ்பத்திரிகள் மட்டுமன்றி தனியார் ஆஸ்பத்திரிகள், சிகிச்சை நிலையங்கள், தனிப்பட்ட முறையில் தொழில் புரியும் வைத்தியர்கள் வீடுகள் யாவும் நாளாந்தம் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன.

வயது வந்து மூப்படைந்தவர்கள் மட் டுமா எமது மத்தியில் நோயாளிகளாக இருக்கிறார்கள்? அவர்களைவிட அதிகமான நோயாளர், ஐம்பது வயதுக்கு குறைந்த கூட்டத்தைச் சார்ந்தவர்களே.

ஒரு குறிப்பிட்ட வயதைத் தாண்டிய வர்களை மட்டுமே பாதிக்கும் என்று சில வியாதிகள் கருதப்பட்டது உண்டு. ஆனால் மிகக் குறைந்த வயதானவர்கள் கூட இப் போது அவ்வியாதிகளுக்கு ஆளாகிறார்கள்.

இவ்வாறு மக்களில் பெரும் எண்ணிக் கையானோர் நோயாளர்களாக மாறுவதற் குக் காரணம் என்ன?

* சிறுவயதிலிருந்தே போஷாக்கான—சம னிடப்பட்ட சாப்பாடு உட்கொள்ளப் படாமை,
* சிறுவயதிலிருந்தே சுகத்துக்கு ஏதுவான சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொள் ளாமை.
* போதிய உடற்பயிற்சி இன்மை.

இந்த மூன்று முக்கிய காரணிகளே, சனத் தொகையில் அரைவாசிக்கு மேலானோரை நோயாளிகளாக மாற்றுகின்றன.

அடிப்படைச் சுகாதார அறிவின்மை யாலேயே முன்கண்ட மூன்று அம்சங்களிலும் மக்கள் கவனம் எடுக்கத் தவறுகிறார்கள்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பல பிரதிநிதிகள் கலந்து கொண்ட சுகாதாரக் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய பிரதித் தொழில் ஆணையாளர் திரு எம். பொன்னம் பலம் அடிப்படைச் சுகாதார அறிவின் அவ சியம் குறித்துச் சரியாக வலியுறுத்தி இருக் கிறார்.

அடிப்படைச் சுகாதார அறிவின்மையின் காரணமாகவே எமது மக்களில் பலர் வைத் தியசாலைகளை நாடவேண்டி இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

மேலை நாடுகளில் பெரிய சிகிச்சைக்குரிய நோய்களுக்கும், மனநோய் போன்றவற்றுக் குமே மக்கள் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்வ தாகவும் தெரிவித்துள்ளார்.

அது முற்றிலும் உண்மை அடிப்படைச் சுகாதார அறிவு இளமையிலேயே இருப்பின் சிறு வயது தொடக்கமே அவற்றைக் கடைப் பிடிக்கலாம். அதன் மூலம் நோய் வராது தடுத்துக் கொள்வது சுலபம்.

பாடசாலைகளில், ஆரம்ப வகுப்புகளில் இருந்தே அடிப்படைச் சுகாதார அறிவு புகட்டப்படுதல் அவசியம். அவற்றைப் போதிக்க வல்ல ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதல்ல. எல்லா ஆசிரியர்களுக் கும் அடிப்படைச் சுகாதார அறிவைப் போதிப் பதற்கான பயிற்சி அளித்தால் போதுமானது.

அதே போல பொதுமக்களுக்கும் ஆரம்ப சுகாதார அறிவைப் போதிக்கும் விதத்தில் சனசமூக நிலைய, கிராம முன்னேற்றச் சங்க மட்டங்களில் கருத்தரங்குகளை நடத்தலாம்.

பிரத்தியேக சமூகசேவை நிலையங்களைச் சேர்ந்த சிலருக்கு, ஆரம்ப சுகாதார அறி வைப் போதிப்பது சம்பந்தமான பயிற்சி வகுப்புகளைத் தொண்டர் ஸ்தாபனங்களை நடத்துவது நற்பயன் தரும்.

# சேவைக் காலப் பயிற்சி நெறி:
# மாணவர்கள் கல்வி பாதிப்பு

## விடுமுறை நாட்களில் நடத்தக் கோரிக்கை

பலாலி, பெப் 9

சேவைக்காலப் பயிற்சி நெறி பாடசாலை நாட் களில் நடத்தப்படுவதால் பாடசாலைகளின் பாட வேலைகள் பாதிப்படை கின்றன.

எல்லாப் பாடநெறிப் பயிற்சிகளும் ஆதேசமாக வேலைநாட்களாகிய ஒரே நாளில் நடத்தப்படுவ தால் பாடசாலைகளில் ஆசிரியர்களின் வரவு பாதிக்கப்படுகிறது. இத னால் குறிப்பிட்ட நாளில் பாடசாலையை மூட வேண்டிய நிலைமையும் சில இடங்களில் ஏற்படு கிறது.

ஏற்கனவே ஆசிரியர்க ளது பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள பல பாடசாலைகள் குறிப் பிட்ட நாட்களில் மூடப் பட்டு விடுகின்றன.

"மாணவர்களது நலனை மையமாக வைத்து ஆசி ரியர்களது பயிற்சி நடை பெற வேண்டுமேயன்றி ஆசிரியர்களது நலனை மையமாக வைத்து பயிற் சிகள் அமையக் கூடாது"

இவ்வாறு பாடசாலை அதிபர்கள் பலரும்—பெற் றோர்களும் கருதுகின்ற னர்.

இதனால் ஆரம்பத்தில் நடைபெற்றது போன்று பாடசாலை விடுமுறை நாட்களில் அல்லது சனிக்கிழமைகளில் சேவைக்காலப் பயிற்சி நெறி நடத்தப்படவேண் டும்.

பங்குபற்றும் ஆசிரியர் களுக்கும் மேலதிக கொடுப்பனவுகள் வழங் கப்பட வேண்டும். இப் பயிற்சிகளில் பங்குபற்ற ஆசிரியர்களைக் கட்டா யப்படுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு பெற் றோர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

(இ-119)

## ஆடுகளை இழந்தவருக்கு படையினரிடமிருந்து ரூ 2000 நஷ்ட ஈடு!

அம்பாறை, பெப் 9

பாதுகாப்புப் படையினரிடம் தனது இரு ஆடுகளை இழந்த தமிழர் ஒருவர் அதற்கு நஷ்ட ஈடாக இரண்டாயிரம் ரூபாவைப் பாதுகாப்புப் படையினரிடமிருந்தே பெற்றுக் கொண்டார்.

சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த சவளக்கடைப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

சவளக்கடைப் பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் தமிழர் ஒருவர் அப்பகு தியால் மேய்த்துவந்த ஆட்டுப்பட்டியிலிருந்து இரு ஆடுகளைப் பறித்துச் சென்றனர்.

ஆடுகளைப் பறிகொடுத்த தமிழர் பிரதி அமைச்சரும் சம்மாந்துறை எம். பி யுமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீதிடம் நேரில் வந்து நடந்த அநியாயத்தை முறையிட் டார்.

அவரது முறைப்பாட்டை எழுத்து மூலம் பெற்ற பிரதி அமைச்சர் அதனை அம்பாறை மாவட்ட இராணுவ இணைப்பதிகாரிக்கு அனுப்பியதுடன், அதன் பிரதியை ஜனாதி பதிக்கும் அனுப்பினார்.

உடனே சில நாட்களில் விசாரணைக்காக இணைப்பதிகாரியினால் அழைக்கப்பட்டார் அந்த ஏழைத் தமிழர்.

விசாரணை முடிவில் அவருக்கு இழந்த இரு ஆடுகளுக்கும் நஷ்டஈடாக இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டது. (இ-14)

## செய்திக்கொத்து

### அங்காடி வியாபாரி பட்ட பாடு

கொழும்பு, பெப். 9

'Fly Tiger Airline' என்று அச்சிடப்பட்ட துணிகளை விற்றதாகக் கூறப்படும் அங்காடி வியாபாரி ஒருவர் கண் டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இத்துணி விளம்பரத் துக்காகப் பயன்படுத்தப் பட்டது.

இரகசியப் பொலீஸார் இத்துணி எப்படி வந்தது என்பது பற்றி விசாரித்து வருகின்றனர்.

இத்துணியில் விமானம் ஒன்றின் படமும் அச்சி டப்பட்டிருந்தது. (இ-எ)

### கிழக்கிலங்கை பல்கலை மாணவர் பிரயாண ஒழுங்கு

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயி லும் யாழ் மாவட்ட மாணவர்கள் மட்டக் களப்பு செல்வதற்காக ஒரு இ. போ. ச பஸ் ஒழுங்கு படுத்தப்பட்டுள் ளது.

நாளை செவ்வாய்க் கிழமை காலை 4.30 மணிக்கு மாணவர்கள் யாழ் பிரதான பஸ் நிலை யத்திற்கு வந்து பயணத்தை மேற் கொள்ள லாம்.

இதற்கென 30 மாண வர்களுக்கு இடம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### போலி விஸா 2 தமிழர் கைது

கொழும்பு, பெப் 9

போலி பிரிட்டிஷ் விஸாவுடன் கட்டுநாய க்கா விமான நிலையம் சென்றதாகக் கூறப்படும் இரண்டு தமிழ் இளைஞர் கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்

அருளானந்தன் குக ஜோதி, ஆறுமுகம் சிவ பாலு ஆகியோரே கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள்.

கோட்டை நீதிவான் இரண்டுபேரையும் இம் மாதம் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தர விட்டார். (இ-எ)

### பயிர்ச் செய்கை நிவாரணம்

முள்ளியவளை, பெப். 9

முல்லைத்தீவு மாவட் டத்தில் அளம்பில், செம் மலை, குமுளமுனை, முறிப்பு, ஆறுமுகத்தான் குளம், தண்ணிமுறிப்பு, பழம்பாசி, ஒதியமலை ஆகிய இடங்களிலுள்ள 530 அகதிகளுக்கு பயிர்ச் செய்கை நிவாரணமாக தலா 400 ரூபா காசோ லையாக வழங்கப்பட்டது.

றெட்பானா ஸ்தாபனத் தின் முல்லைத்தீவு திட்ட முகாமையாளர் திரு ஏ ஜி எஸ் பாலச்சந்திரன் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தின் ஊடாக இதனை வழங்கினார். (இ-93)

### நியமனம்

பருத்தித்துறை, பெப். 9

நெல்லியடி கோட்ட கல்வி பணிமனையின் பொது நிர்வாகப் பிரி வுக்கு கல்வி அதிகாரி களான திரு வ. க ஈசுவரபாதமும், பாட சாலை நிர்வாகப் பிரி வுக்கு திரு. ப. சச்சி தானந்தமும், கல்வித் திட்டமிடல் பிரிவுக்கு திரு. பொன் கணேச னும் நியமிக்கப்பட்டுள் ளனர்.

இக்கோட்ட கல்விப் பணிமனையின் பொறுப் பாளராக பிரதம கல்வி அதிகாரி திரு. வி. தங் கராசா கடமைப் பொறுப் பு ஏற்றுள்ளார். (இ-118)

### புங்குடுதீவில் கருத்தரங்கு

புங்குடுதீவு, பெப். 9

புங்குடுதீவில் உள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி தொடர் பான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 12ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தில் நடைபெறும்.

வேலணை உதவி அர சாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோ கத்தர் உட்படப் பலர் இக்கருத்தரங்கில் கலந்து கொள்வர். (இ-131)

### பனம் பொருள் கைப்பணிப் பயிற்சி அங்குரார்ப்பண விழா

யாழ்ப்பாணம், பெப்9

இருபாலை பாரதி கலா மன்ற மாதர்களுக்கான பனம்பொருள் கைப்ப ணிப் பயிற்சி அங்குரார்ப் பண விழா இன்று நடை பெறும்.

கோப்பாய் லயன்ஸ் கழகத்தினரால் பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் இவ் வைபவம் இருபாலைச் சந்தி பல நோக்குக் கூட் டுறவுச் சங்க விற்பனை நிலையத்தின் மேல் மாடி யில் காலை 9 30 மணிக்கு நடைபெறுகிறது.

லயன் செ. செல்வரத் தினம் தலைமை உரையும், லயன் செ. சபாரத்தினம் வரவேற்புரையும், லயன் இ. விஜயரத்தினம் அறி முகவுரையையும் பனை அபி விருத்திச் சபைத் தலை வர் திரு க. நடராசா சிறப்புரையும் நிகழ்த்து வர்.

இதனை அடுத்து ஆசி உரைகளும் நன்றி உரை யும் இடம்பெறும். (இ)

### கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, பெப். 9

சாவகச்சேரி சங்கத் தானை மீனாட்சி அம்மன் தேவஸ்தான புனருத்தா ரண மகா கும்பாபிஷே கம் இன்று ஒன்பதாம் திகதி நடைபெறவிருக் கிறது.

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வ நாதக் குருக்கள் தலைமை யில் வைபவம் இடம் பெறும். (இ-31)

## கோப்பாய் கல்வி வட்டாரத்தை நெல்லியடி கோட்டக் கல்வி அலுவலகத்துடன் இணைக்க தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

கோப்பாய்க் கல்வி வட்டாரத்தை நெல்லி யடி கோட்டக் கல்வி அலுவலகத்துடன் இணைப் பதை இலங்கைத் தமி ழர் ஆசிரியர் சங்கம் ஆட் சேபித்துள்ளது.

இது கோப்பாய்க் கல்விவட்டாரத்திலுள்ள மிகப் பெரும்பான்மை யான ஆசிரியர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற் படுத்துமெனவும், கோப் பாய்க் கல்வி வட்டா ரத்தை மானிப்பாய் கோட்டக் கல்வி அலுவல கத்துடனோ அல்லது யாழ் கோட்டக் கல்வி அலுவலகத்துடனோ இணைப்பதே பொருத்த மானது என்றும் ஆசிரி யர்களுக்கு தமது தேவை களைப் பூர்த்தி செய்ய வசதியானது என்றும் இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித் துள்ளார்.

இதற்கிடையில் கோப் பாய்க் கல்வி வட்டா ரத்தை நெல்லியடி கோட்டக் கல்வி அலு வலகத்துடன் இணைப் பதா இல்லையா என் பதை வ. க. அதிகாரி அதிபர்களின் கூட்டத் தில் இரகசிய வாக் கெடுப்பு நடத்தி தீர்மா னிக்கவுள்ளார்.

இத்தீர்மானம் இ. த. ஆ. சங்கத்தின் கோரிக் கைக்கு மாறாக அமையு மானால் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நட வடிக்கைகள் தொடர் பாக சங்கம் கோப்பாய் வட்டாரத்திலுள்ள ஆசி ரியர்களுடன் கலந்தா லோசித்து தீர்மானிக்கு மென சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (இ)

### தீபலக்ஷ்மி பூசை

வண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்மன் ஆலயத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை (13-2-87) பௌர்ணமி தினம் அன்று மாலை 19ஆவது தீபலக்ஷ்மிபூசை நடைபெறும்.

இச்சுமங்கலி பூசை பௌர்ணமி தோறும் நடைபெறுகின்றது.

# மேற்கு வங்காளம்
# பிரிக்கப்படமாட்டாது

## டார்ஜிலிங்கில் ராஜீவ் அறிவிப்பு

டார்ஜிலிங், பெப் 8

மேற்கு வங்காளமோ வேறு எந்த மாநிலமோ பிரிக்கப்படமாட்டாது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி டார்ஜிலிங் கில் செய்தியாளர் மகா நாட்டில் தெரிவித்தார்.

மேற்கு வங்காள முதல் அமைச்சர் ஜோதிபாசும் மாநாட்டில் கலந்து கொண்டார்.

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணித் தலை வர் சுபாஸ் கிஷிங் கோரிக் கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை பிரதமரிடம் சமர்ப்பித்தார்

கோரிக்கைகளைக் கவ னிப்பதாக பிரதமர் சொன்னார்.

முதலமைச்சர் ஜோதி பாசு பேசுகையில், கூர்க் கலந்து அமைக்கும் பேச் சுக்கே இடமில்லை என்று சொன்னார். (இ-எ)

## 262 தமிழர் கொலை குறித்து ராஜீவ் கவலை

புதுடில்லி, பெப். 8

கிழக்கு மாகாணத்தில் 262 தமிழர் கொலை செய் யப்பட்ட சம்பவம் குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி ஆழ்ந்த கவலையை என்னிடம் வெளியிட் டார்.

இப்படி தமிழக முதல மைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன் பி. பி. சி செய்தியாளர் மார்க் ரலிக்கு அளித்த பேட்டி யில் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக் கிழமை பிரதமர் ராஜீவ் காந்தியை முதலமைச்சர் இராமச்சந்திரன் சந்தித் தார்.

அதன் பின்னர் அவர் பி பி சி செய்தியாள ருக்கு மேற்கண்ட தக வலை வெளியிட்டார். (இ-எ)

## 40 பேரை ரஷ்யா விடுதலை செய்தது

மாஸ்கோ, பெப் 8

கருத்து வேறுபாடுகள் காரணமாக முகாம் களில் தடுத்து வைக்கப் பட்டவர்களில் சுமார் 40 பேரை ரஷ்ய அரசு விடுதலை செய்துள்ளது.

இப்படி மாஸ்கோவில் இருந்து வரும் தகவல் கள் தெரிவிப்பதாக பி. பி. சி வானொலி அறி வித்தது. (இ-எ)

## மே. வங்க தேர்தல் முகர்ஜியின் கட்சி

கல்கத்தா, பெப் 8

முன்னாள் நிதி அமைச் சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான புதிய அரசியல் கட்சி, லோக் தள் மற்றும் சில கட்சிக ளுடன் கூட்டணி அமைத்து மேற்கு வங் காள சட்டசபைத் தேர் தலில் போட்டியிட முடிவு செய்துள்ளது. மார்ச் 23இல் தேர் தல் நடைபெற உள்ளது. (இ-எ)

## வெளி உலகில்

### மீசையை எடுத்த மோகன்தாஸ்

சென்னை, பெப். 8

கட்டாய லீவில் அனுப் பப்பட்டுள்ள சென்னை பொலீஸ் ஆணையாளர் திரு. மோகன்தாஸ், சிங் கப்பூர் சென்றபோது தனது மீசையை எடுத்து விட்டே சென்றாராம்.

சென்னையில் இருந்து வெளியாகும் 'எஸைட்' ஆங்கில வாரசஞ்சிகை இத்தகவலை வெளியிட்டு உள்ளது.

மத்திய, மாநில அரசு களின் முன் அனுமதியை எழுத்தில் பெற்ற பின் னரே பொலீஸ், பாது காப்புப்படை அதிகாரி கள் வெளிநாடுகள் செல் வது வழக்கம். திரு. மோகன்தாஸ் அந்த நடைமுறையை மீறிச் சிங்கப்பூர் சென்றார். (இ-எ)

## மோராளிகளுக்கு அஞ்சலி தெரிவித்து
## சுன்னாகத்தில் துக்கம்

சுன்னாகம், பெப். 9

வயாவிளான் புன்னா லைக் கட்டுவன் பகுதி யில் இராணுவத்துடன் நேரடி மோதலில் வீர மரணமடைந்த போரா ளிகள் மூவருக்கும் அஞ் சலி தெரிவித்து நண் பகல் 12-00 மணிவரை சுன்னாகத்தில் சனியன்று பூரண கடையடைப்பும் ஹர்த்தாலும் அனுட்டிக் கப்பட்டன.

எல்லா வர்த்தக ஸ்தா பனங்களும் மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் தொங்க விடப்பட்டிருந் தன.

தனியார் தொழிற்சா லைகள், கல்வி நிலையங்கள் யாவும் மூடப்பட்டு கிடந் தன சந்தையிலும் வியா பாரிகள் காணப்பட வில்லை.

வீர மரணம் அடைந்த போராளி கபிலின் பூத வுடல் விடுதலைப் புலிக ளின் சுன்னாகம் பிரதேச அலுவலகத்தில் நண்பகல் 12.00 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தது.

இந்த அஞ்சலிக்கான சகல ஏற்பாடுகளையும் விடுதலைப்புலிகள் சுன்னா கம் பிரதேசப் பொறுப் பாளர் திரு. சுதன் செய் திருந்தார் (இ-97)

## பொய்யாமொழி



குறள்:

நன்றுங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுங்கால்
அல்லற் படுவ தெவன்.

பொருள்:

நல்வினை விளையும்போது நல்லவை எனக் கருதி மகிழ்கின்றவர், தீவினை விளையும்போது துன்பப்பட்டுக் கலங்குவது ஏனோ?

# வேதப் பொருள் ஒளிரும்
# சீதாராம சாஸ்திரிகள்

தொண்டர் தம் பெருமை சொல்லுதல் அரிது. அதுவும் வேத நெறி தழைத்தோங்க வும் மிகு சைவத்துறை விளங்கவும் அவன் அருளால் அவன்தாள் வணங்கி 'மேன்மை கொள் சைவ நீதி' உலக மெல்லாம் விளங்கவும் செய்த மெய்யடியார் களின் மேம்பாட்டைக் கூறுவதென்றால் அரிதி லும் அரிது. செயற்கரிய செய்து பிறர்க்கென வாழும் பெரும் பேறு டைய தவசிலர்கள்தான் உண்மையான தொண் டர்கள்.

**வியாகரண சிரோன் மணி சீதாராம சாஸ் திரிகளுக்கு இன்று 75 ஆவது வயது பூர்த்தி யாகியுள்ளது.**

**நோய்வாய்ப்பட்டி ருக்கும் அவர் நலம் பெற வேண்டி சகல ஆலயங்களிலும் பிரார்த்தனை செய் வது சிறந்தது என சைவசமய அபிமானி கள் கருத்துத் தெரி வித்துள்ளனர்.**

அவர்களைக் காண்பது



வும் நன்று. அவருடைய சொற்களைக் கேட்பது வும் நன்று. அவர்களு டைய குணங்களை உரைப்பதுவும் நன்று.

எனவே காட்சியா லும், இணக்கத்தாலும், சொற்களாலும், குணங் களாலும் உவப்பற்றல் கூடும் உத்தமராய ஸ்ரீ சீதாராம சாஸ்திரியா ரைப் பற்றிக் கூறுவதில் இருக்கக்கூடிய உவகை பேருவகையாகவே இருக் கும். தூய்மை, எளிமை இவற்றிற்கு உறைவிட மானவர் சீதாராமர். தெய்வ சம்பந்தமும் சைவ சம்பந்தமும் பெற்று ஞான சம்பந்தத் தையும் அடைந்தவர் இப்பெரியார்.

சாஸ்திரியார் அவர் கள் ஒரு நடமாடும் பல் கலைக்கழகம். பலகலை அறிவும் நிறைந்த ஒரு களஞ்சியமாக அவர் திகழ்கிறார்.

வேதங்களிலும் ஆக மங்களிலும் தர்ம சாஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் ஐ. கைலாசநாதக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு வதிரி உல்லியனெல்லை கண்ணகை அம்பாள் தேவஸ்தான

புனருத்தாரண அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

1987 - 02 - 09 திங்கட்கிழமை


கண்ணகை அம்பாள் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சுப்பையா அன் சன்ஸ்**
வீடியோ கசற், போட்டோ பிரதிகள்
நெல்லியடி

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**HAPPY TEXTILES**
சிறந்த உடுபுடவை வியாபாரிகள்
நெல்லியடி

அம்பாள் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்

**ந வ ர ச ன்**
பிளாஸ்டிக் சென்றர்
அல்வாய் மேற்கு

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**செல்வம்ஸ் ஸ்ரோர்ஸ்**
பலசரக்கு, உரம் முதலிய பொருட்கள்
மாலி சந்தி

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**ஐமுனு ஸ்ரோர்ஸ்**
பஸ் நிலையம் - நெல்லியடி

அம்பாள் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்

**K. S. & BROTHERS**
86, Colombo Street
KANDY

கண்ணகை அம்பாள் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**திருமகள் ஸ்ரோர்ஸ்**
புத்தகசாலை
நெல்லியடி

அம்பாள் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்

**இந்திரா கபே**
சிற்றுண்டிச்சாலை
நெல்லியடி

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சிற்றம்பலம் ஸ்ரோர்ஸ்**
பலசரக்குக் கடை
நெல்லியடி

அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**V. V. N.**
தேசிக்காய் வியாபாரம்
திருநெல்வேலி


சிறப்பு மலர் வெளியீடு:
வதிரி அம்பாள் இளைஞர் மன்றம்

வதிரி உல்லியனெல்லை மக்களின்

## காவல் தெய்வம்

## கண்ணகை அம்பாள்

நமது நாட்டில் தொன்று தொட்டு பல வித வழிபாடுகள் காணப்படுகின்றன. சக்தி, சிவன், முருகன், விஷ்ணு, பிள்ளையார் போன்ற பல தெய்வங்களை மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

அவரவர்கள் நம்பிக்கைக்கும், தேவைக்கும் ஏற்ப தெய்வங்களை வழிபட்டு வருதலே சைவ மரபு. அந்த வகையில் வீரத்தின் செல்வியாக — தாயாக சக்தியினை வழிபட்டு வருதலை மறத் தமிழர் இலட்சியமாகக் கொண்டனர்.

பெண்களும் தம் எண்ணங்களுக்கு ஏற்ற உருவமாக சக்தியையே கொண்டுள்ளனர்.

பண்டைய காலத்தில் கொற்றவையாகவும், காடுறை செல்வியாகவும் வழிபட்ட சக்தியைக் காலப் போக்கில் பலவித பெயர்கள் இட்டு வழிபடுகின்ற மரபு காணப்பட்டது.

சக்தி முத்தொழிலைச் செய்யும்போது பிரமி, நாராயணி, உமை எனப் பல பெயர்களைப் பெறுகிறாள். அவளே இறைவனுக்கு ஒப்பானவளாகும்போது தூர்க்கையாகவும், கால சொரூபிணியாகும்போது காளியாகவும், வித்தையின் வடிவெடுக்கும்போது சரஸ்வதி எனவும், செல்வத்தின் வடிவில் லட்சுமியாகவும் அழைக்கப்படுகின்றாள்.

### சக்தி

சக்தியே எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும், இயக்கத்திற்கும் காரணமானவள். இதனால் "தாய்" என்பர். "ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்றாள்" என்பது பழைய பாடல்.

வட மாகாணத்தில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வதிரி என்னும் ஊரிலே அன்னைக்கு அன்னையாக, அகில அண்டங்களையும் படைத்து, காத்து அருள் புரியும் அம்பாள் கோயில் கொண்டருளியுள்ளாள். அம்பாளைக் கண்ணகை எனவும், ராஜராஜேஸ்வரி எனவும் சக்தியடியார்கள் பல விதமாகப் போற்றிப் பணிவர்.

### கர்ண பரம்பரைக் கதை

கண்ணகை அம்மன் ஆலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதை ஒன்றுண்டு. முற்காலத்தில் அம்மன் கோயிலின் அருகில் ஒரு தம்பதிகள் குடியிருந்தனர். அவர்கள் வீட்டுக்கு ஓர் அறியாப் பெண் (Strange woman) வந்து தலையைச் சொறிந்து கொண்டு நின்றாள்.

அப்போது அவ் வீட்டுக்காரி அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு தலையினைப் பார்த்தார்.

அவளின் தலையில் அநேக கண்கள் — ஆயிரமாயிரம் கண்கள் இருந்ததை அந்த வீட்டுக்காரி கண்டு அதிசயித்தாள்.

அப்பொழுது அப் பெண் வீட்டுக்காரியை நோக்கி "நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். என்னைக் குல தெய்வமாக வைத்து ஆதரிப்பாயாக" என்று கூறினாள்."

தலையிலே பல 'கண்கள்' காணப்பட்டமையால் 'கண்ணகை அம்மன்' என்ற திருப்பெயர் காரணப் பெயராகவும் அமைந்துவிட்டது என்பர்.

### தாழி விளக்கு

இதன்பின் அவ்விடத்தில் - திண்ணையில் ஓர் தாழி விளக்கை திறுவி இந்த அம்மனை வழிபடத் தொடங்கினார்கள்.

காலப் போக்கில் அவ்விடத்தைக் கோயிலாக்கி வழிபட்டு வரலாயினர். இக்கோயிலில் ஆவணி மாதத்தில் வரும் ரேவதி நாள் - நட்சத்திரம் தொடங்கி பதினைந்து நாட்கள் திருவிழாவும் நடைபெற்று வந்தது.

ஆனால் இடையில் சிறு காலமாக எதுவித விழாவும், விசேஷ பூசைகளும் இன்றி இக்கோயில் காணப்பட்டது. தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

### அற்புதங்கள் ஆயிரம் ஆயிரம்

அம்பாளின் அற்புதங்கள் ஆயிரமாயிரமாகும். அவை அவ்வூரில் வாழும் மக்கள் மனத்தினை விட்டகலா. உதாரணமாக கோயிற் கிணற்றில் தவறிப் விழுந்த பையன் ஒருவன் எதுவித ஆபத்தும் இன்றி பழைய மாதிரியே திரும்ப வெளியேறியமை எல்லோரும் கண்டு அதிசயித்தனர்.

சக்திக்குத் தனிக் கோயில்கள் பல இடங்களில் உண்டு. காஞ்சியிலே காமாட்சி, மதுரையிலே மீனாட்சி, மலையாளத்தில் பகவதி, பங்களூரில் சாமுண்டி, வங்காளத்தில் காளி எனப் பல பெயர்களில், உருவங்களில் அன்னை கொலுவீற்றிருந்து அருள் புரிகின்றாள். 'எல்லாமே சக்தி மயம்' என்பது ஆன்றோர் வாக்கு.

வதிரியில் இருக்கும் அம்பாளை 'உல்லியனெல்லை கண்ணகை அம்பாள்' என அழைப்பர். இங்கு நடை பெற்று வரும் கும்பாபிஷேகம் இனிது நடைபெறவும், இவ்வூர் மக்களை காக்கும் காவல் தெய்வமாக விளங்கவும் எல்லாம் வல்ல அம்பாளின் அருள் வேண்டி அவள் மலர்ப் பாதம் பணிவோம்.

"வாழ்க அம்பாள் திருப்புகழ் வாழிய நாமமெல்லாம்"

- வதிரி அம்பாள் இளைஞர் மன்றம்.

### பாதம் பணிந்திடுவோம்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருக
தஞ்சத் தருள் கண்ணகை அம்மனுக்கு
செஞ் சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சப் பொற் பாதம் பணிந்திடுவோம்
அன்னையே! இள வஞ்சிப் பெண்ணே
உன், கண்மூடி இருந்தது போதுமம்மா
எம் வதிரி வாழ் மக்கள் மனம் மாறி
கொண்ட நற் செய்கையினை ஏற்பாயம்மா.
கற்பரசிக் கண்ணகி அன்னையே! — உன்
பொற்புறப் பாதம் பணிந்திடுவோம் - எம்
சிற்சில பிழைகளைப் பொறுத்திடுவாய் - இனி
புத்துணர்ச்சியுடன் எழுந்து அருள் தருவாய்
வளைகழலரசரின் வண்மையைக் காக்க
வனிதையாய் பூம்புகாரில் வந்துதித்த கண்ணகியே
ஈனவரின் கொடுமையைத் தாங்காத
மானவரைக் காக்க மனம் கொள்வாயே!
நாதஒலி கேளாமல் நாலு சனம் வாராமல்
நாதியற்றுக் கிடந்தாய் என்று பார்த்திருந்த
மக்கள் சிலர் பல காலம் திட்ட மிட்டு
தீப ஒளி கண் மறைக்க ஊரெல்லாம் ஆர்ப்பரிக்க
அம்பாளே உனக்கு கும்பாபிஷேகம் செய்கின்றனர்.
பொறுத்தது போதுமென்று எண்ணினையோ
பொறுமையின் எல்லையைத் தாண்டு வாயோ -- அம்மா
பொறையுடைய மக்களின் நிலையினைக்
காணக் கண் கொண்டு வருவாயோ!
பாண்டியனுக்கு நீதியை எடுத்தியம்பி
பல மக்கள் வாழ்க்கையில் ஒளிகாட்டி
பெண்ணுலகின் விளக்காய் வந்த நீ -- நம்
தமிழ் மக்கள் வாழ்வைக் காப்பாயா?
மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
என்றுரைக்க வந்தவளே கண்ணகை அம்பாளே
தன்னெனன்றிருந்த தமிழர் தம் வாழ்வு
கானலாய் போவதைக் காண வந்தாயோ?
காவல் தெய்வம் நீ தான் என்று
கனவினில் கூட எமக்குரைத்தாய்-அதனால்
வதிரியம் பதி வாழ் மக்களை கொடிய
அரக்கரின் கைவினின்று மீட்பாயோ!
—வதிரி அம்பாள் இளைஞர் மன்றம்.

### திருவூஞ்சற் திருப்பதிகம்.

விண்ணோங்கு தேவதருக் கால்களாக
வேத வேதாந்த நிரை கயிறாக
பண்ணோங்கு நாதவிந்து பலகையாக
பாவையர்களிரு பாலும் கவரி வீச
கண்ணோங்கு தரிசனமு மடியார்க்கீந்து
கயிலையை விட்டுலக மெல்லாங் காக்குமாறு
மண்ணோங்கு முல்லியனெல்லைத் தேவந்த
மாநாய்கர் கண்ணகித் தாயாடூருஞ்சல்.

ஆவாழி யந்தணரு மறையும் வாழி
ஆகம புராணங்களனைத்தும் வாழி
கோ வாழி குடி வாழி செங்கோல் வாழி
கோதையர்கள் கற்புநெறி குலவிவாழி
பாவாழி பாவலர்கள் மல்கி வாழி
பயிர் தழைப்பப் பொன்மாரி பெய்து வாழி
மாவாழ ல்லியனெல்லைப் பதியும் வாழி
மாநாய்கர் கண்ணகியும் வாழி.
—வதிரி அம்பாள் இளைஞர் மன்றம்.


மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

★

**சிங்கம் ரேடேர்ஸ்**
பல சரக்கு வியாபாரம்
A 2, நவீன சந்தை,
நெல்லியடி.

அம்பாள் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்

**ம ல ர் ஸ்**
பாதணிக்கடை
நெல்லியடி

**ச ர வ ணா ஸ்**
புடைவைக்கடை
நெல்லியடி

**கமலா அரிசி ஆலை**
உரிமையாளர்: க. நடராசா
வதிரி

**நாதன் ஸ்ரோர்ஸ்**
நவீன சந்தை - நெல்லியடி

**அஜந்தாஸ் ஸ்ருடியோ**
சிறந்த படப்பிடிப்பாளர்
நெல்லியடி

**ச சி ல யி ற் ஸ்**
ELECTRICAL GOODS
நெல்லியடி

**குமுதினி ஸ்ரோர்ஸ்**
நவீன சந்தை - நெல்லியடி

**கந்தை ஸ்ரோர்ஸ்**
புதுச் சந்தை, வதிரி - கரவெட்டி

ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்
நவீனசந்தை - நெல்லியடி

S. குலசிங்கம்
நவீன சந்தை - நெல்லியடி

துர்க்கா ரேடேர்ஸ்
கோபி கிருஷ்ணா - நெல்லியடி

இ இராமசாமி (பெருமாள்)
இதயன்ஸ்
நெல்லியடி

குகா எலக்ரிக்கல்ஸ
நெல்லியடி

கோமள விலாஸ் (சைவ போசனசாலை)
வதிரி

P. பரராசசிங்கம் (கற்பக பால் சாலை)
வதிரி





அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற அமைய

வாழ்த்துகிறோம்

**T. SIVARASA**

**RASA FORAGE STORE** Nelliady.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TYPEWRITERS
தட்டச்சு இயந்திரங்கள்
சிறந்த முறையில், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்
FUDO ENTERPRISES
JAFFNA ROAD - MANIPAY
(Near Bank of Ceylon - Bitsman)

# உதயன்

09 - 02 - 1987 திங்கட்கிழமை

TYPEWRITERS

SALES - SERVICE
FUDO ENTERPRISES
JAFFNA ROAD - MANIPAY.

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

வகுப்புகள்

க. பொ. த உயர் (89) கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம் 09 - 02 - 1987 மொடேன் எடியுகேசன் சென்ரர், சரவெட்டி.

## கிரிக்கெட் உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப் 9

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் திரு. சோமசுந்தரம் நினைவாக அவரது குடும்பத்தினரால் வித்தியாலயத்திற்கு கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் நாளை (செவ்வாய்) வழங்கப்படவுள்ளன.

உடற்கல்வி அதிகாரி திரு கே. கணேசலிங்கம் இந்த உபகரணங்களை கல்லூரி சார்பாக பெற்றுக் கொள்வார்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியால் கல்லூரியில் கிரிக்கெட் கோஷ்டி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ 5)

## வதிரியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பார்கள்.

வதிரி அம்பாள் இளைஞர் மன்றத்தினர், பஹா கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிட்டிருக்கும் சிறப்பிதழை மூன்றும் பக்கத்தில் படியுங்கள். (அ)

# இந்தியாவின் போக்கு வேதனை அளிக்கிறது

## பருத்தித்துறை பிரசைகள் குழு எம். ஜி. ஆருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப் 9

உலகில் எங்கும் அநியாயம் நடந்தாலும் அதற்கெதிராக குரல் கொடுத்து நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு நல்கும் இந்தியா, ஈழத்தமிழர் விடயத்தில் மட்டும் நடுநிலைமைப் போக்கைக் கடைப்பிடிக்கும் கைபாலசாத்தனம் வேதனை தருகிறது

இவ்வாறு பருத்தித்துறை பிரசைகள் குழு தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழத் தமிழினம் பேரழிவின் விளிம்புக்கு வந்துவிட்ட இந்த நேரத்தில் எமக்கு உதவி புரிந்து ஆபத்திலிருந்து காப்பாற்றக் கூடிய ஒரே நாடு இந்தியாதான்.

ஈழத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அழிவுகளும் ஒடுக்குமுறைகளும் எழுத்தில் அடங்காதவை.

நேரில் பார்த்து உணர்ந்தாலன்றி இலகுவில் நம்ப முடியாதவை.

ஓர் அரசு தன் மக்களுக்கு இப்படியும் கொடுமை புரியுமா என்று திகைப்படையக் கூடிய விதத்திலே ஸ்ரீலங்கா அரசு நடந்து கொள்கிறது

போராளிகளைச் சந்திக்க திராணி இல்லாமல் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அழிவேற்படுத்தும் முறையை இஸ்ரவேலரிடம் இருந்து கற்றுள்ளனர்.

ஆதலாலே தமிழ் மக்கள் மீது செயற்படுத்தியும்வருகின்றனர்

எனவே ஈழப்போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து அதை அங்கீகரிக்கும்படி மத்திய அரசைத் தூண்டுங்கள்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-10)

## நெல்லியடி, பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளைகள் வெள்ளிக்கிழமை இயங்கின

சரவெட்டி, பெப் 9

நெல்லியடி மக்கள் வங்கிக்கிளையும் பருத்தித்துறை மக்கள்வங்கிக்கிளையும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமைதிறக்கப்பட்டு இயங்கின.

நெல்லியடி, பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளைகளும்ஏனையகிளைகள் போல் கடந்த இரண்டு மாத காலமாக அடகு வைத்தவர்கள் நடத்திய மறியல் போராட்டத்தால் தொடர்ந்து மூடப்பட்டு இருந்தன

வாடிக்கையாளர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

வாடிக்கையாளர் சங்கம் ஒன்றையும் அமைத்திருந்தனர்

வாடிக்கையாளர் சங்கத் தலைவர்திரு.பீ தாமுவும், செயலாளர் திரு செ. சண்முகமும் இது தொடர்பாக கூட்டாக ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-70)

## நினைத்தால்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

போர்கு வாதிகள் மத்தியிலும் பின்னடையச் செய்யும்

ஈரோஸ் ஆரம்பகாலத்தில் தெற்கில் பல தாக்குதல்களை மேற்கொண்டது.

அவை யாவும் பொருளாதார ரீதியான தாக்கங்களாகவே அரசுக்கு இருந்தன.

அப்பாவிச் சிங்கள பொதுமக்கள் இறக்கலாம் என்ற காரணத்தாலேயே தற்போது ஈரோஸ் எந்த ஒரு தாக்குதலையும் தெற்கில் செய்வதில்லை

இப்படி திரு பாலகுமார் கூறினார்

எயர்லங்கா விமானத் தாக்குதலை ஈரோஸ் நடத்தவில்லை என்றும் அவர் சுவிஸ் பத்திரிகையாளரிடம் தெரிவித்தாராம். (இ-5)

## ஒலி, ஒளி கட்டுப்பாட்டு சபையின் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.9

உள்ளூர் தொலைக்காட்சி சேவையாளர்கள், மினி சினிமா வீடியோ சென்ரர், ஒலிபெருக்கி சேவை செய்யும் உரிமையாளர்கள் அனைவருக்குமான பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

புதன் காலை பத்து மணிக்கு யாழ் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள ஒலிஒளி கட்டுப்பாட்டுச் சபையினர் அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெறும்.

சகலரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-10)

## வேதப்...

(8ம்- பக்கத்தொடர்ச்சி)

திரங்களிலும் உள்ள உட்பொருளை அறிவுத் தாகமுடையவர்கள் மிக எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் சொற்சுவையோடு எடுத்துச் சொல்லும் ஆற்றல் இவருக்கு அமைந்த தனிச்சிறப்பு

சமயம், தத்துவம் கிரியை முறைகள் பற்றி இவர்கள் எழுதிய கட்டுரைகளைப் பல மலர்களிலும், சஞ்சிகைகளிலும் படித்து அனுபவித்தவர்கட்கு இவருடைய ஆழ்ந்த வடமொழி அறிவும் மிகுந்த தமிழ்ப்புலமையும் புலப்படும்.

அவர் ஓதும் வேதத்தின் உட்பொருள் உள்நின்று ஒளிரும். பாடும் கீதத்தில் பக்தி ரசம் பண்ணமைந்து சொட்டும்

வழி வழி வந்த திருக்கூட்டத்தின் மரபில் வந்த அவர் கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூடி ஈழவள நாட்டில் இன்னும் பல ஆண்டுகள் பயனுள்ள பணியாற்ற வேண்டும் என்பதே சைவ அன்பர்களின் மேலான ஆசை.

நன்றி:
மணிவிழா மலர்

## கொழும்பி.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தப்பட்டது

லொறி மறிக்கப்பட்டு சாரதியிடம் இருந்த ரொக்கப்பணம் அபகரிக்கப்பட்டது கொள்ளைக் கோஷ்டியினர் சாரதியையும் கிளீனரையும் தாக்கிக் கீழே இறக்கிவிட்டு லொறியைப் பொருள்களுடன் கடத்திச் சென்றனர்.

இது சம்பந்தமாக சாரதியும் கிளீனரும் வென்னப்புவ பொலிஸில் புகார் செய்தனர் பொலிஸார் தேடுதல் நடத்தி காட்டுக்குள் இருந்த லொறியை மீட்டனர்.

லொறியில் இருந்த பொருள்கள் அனைத்தும் கொள்ளை அடிக்கப்பட்டு லொறி வெறுமையாகக் காணப்பட்டது

35 கேஸ் சிகரெட், புடைவைப் பார்சல்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பாக்கு, மற்றும் முட்டைப் பெட்டிகள் என்பனவே கொள்ளையிடப்பட்ட பொருள்கள் ஆகும். (இ-10)

## விடுதலைப் புலி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

கப்டன் நேயல் மன்னார், லெப்டினன்ட் காண்(மாமா) கண்ணகம், ஜீவன் மன்னார் ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர்.

[illegible] தெரிவித்துக் கொண்டனர். (இ-10)

## பிரயாண ஒழுங்குகள்

● ஓமான் ● குவைத்

ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புபவர்கள் உடன் எம்மிடம் நேரில் தொடர்புகொள்ளவும்

எமது முகவர் நிலையத்தினூல் கடந்த வாரம் பயணம் மேற்கொண்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டிருந்தோம். இவ்வாரம் 07 - 02 - 87 பயணம்மேற்கொண்டோரின் விவரங்கள்.

1 கந்தையா ஞானசூரியர், கொக்குவில் மேற்கு கொக்குவில்
2 வைத்தி யாகோப் செல்வஜினதாஸ் வட்டாரம் 5, புதுக்குடியிருப்பு.
3 சண்முகம் பாஸ்கரன், வாட் நம்பர் 6, புதுக்குடியிருப்பு
4 பரராசசிங்கம் குணசீலன், வாட் நம்பர் 6, புதுக்குடியிருப்பு.
5 தேவரத்தினம் தயாபரன், கொக்குவில் மேற்கு. கொக்குவில்.
6 ஜேம்ஸ் பவ்ஸ்ரின் இராசநாயகம், இளவாலை மேற்கு, இளவாலை
7 வீரவாகு மற்குணம், நந்தாவில், கொக்குவில்.
8 கந்தையா ரவிந்திரதாஸ், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
9 இராசலிங்கம் விஜேந்திரன், 145 கண்டிக்குளி றோட், கொழும்புத்துறை.
10 சுப்பிரமணியம் ராஜேந்திரன், 340. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
11 ரட்ணசிங்கம் பகிரதன், வல்வெட்டித்துறை.

எமது முகவர் நிலையத்தினூல் பயணம் மேற்கொள்வோரின் பெயர் விவரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம்; எமக்கு வட பகுதியில் வேறு கிளைகள் கிடையாது

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோகிளப்,
இல 96, 4-ம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No 87 2/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3.
T-phone: 574000

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 09 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA Registered as a News - paper at the General Post Office, Sri Lanka Under Number QJ. 60 N 86 Telephone, 24805, 23078

## விளையாட்டரங்கு

## ஷப்ரு ஆதரவில் நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 9

ஷப்ரு யுனிக்கோ நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் வை.எம் சி ஏ நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது

முதலாவது போட்டியில் யாழ் ஜொலி ஸ்டார்ஸ் அணியும் வல்வெட்டித்துறை வை எம் சி ஏ அணியும் மோதின.

வல்வெட்டித்துறை அணி ஒரு மேலதிக புள்ளியினால் யாழ் ஜொலிஸ்டார்ஸ் அணியைத் தோற்கடித்தது.

இரண்டாவது போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி யாழ் வை எம் சி ஏ அணியைத் தோற்கடித்தது.

மூன்றாவது போட்டியில் வல்வெட்டித்துறை வை. எம் சி. ஏ. அணி மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணியைத் தோற்கடித்தது

டாக்டர்விஞயகமூர்த்தி, திரு. ஜே. என். பொன்னையா. திரு கே டபிள்யு. விமலராஜா ஆகியோர் நடுவராகப் பணியாற்றினர். (இ-எ)

## கிரிக்கெட் டெஸ்ட்: வெற்றி தோல்வி இல்லை

சென்னை, பெப் 9

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

ஐந்தாவது தினமான நேற்று பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுக்கள் இழப்புக்கு 122 ஓட்டங்களை எடுத்தது

இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 527 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 487 ஓட்டங்களை எடுத்து இருந்தது. (இ-எ)

## உருத்திர---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

சிப்பாய்களின் இரண்டு கவச வாகனங்களும் சேதமடைந்தன. சிப்பாய்களில் பத்துப் பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே இத்தாக்குதலில் ஆறு இப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று அரசு நேற்றிரவு அறிவித்தது

புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் நேற்று அதிகாலை சிப்பாய்கள் பின் வாங்கி முகாமுக்குச் சென்றனர்.

இளங்கோ, நிமால், சசி, அன்சார், ரவி ஆகியோர் விடுதலைப் புலிகளில் வீர மரணமடைந்தவர்களாவர். (இ-10)

## யாழ்வந்த---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மறித்து சோதனை இட்டனர். அப்போது பஸ்ஸில் இருந்த இரண்டு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

இளைஞர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று நம்பி பஸ் சாரதி இரண்டு மணித்தியாலம் வரையில் பஸ் புறப்படுவதைத் தாமதித்தார்.

இளைஞர்கள் விடுவிக்கப்படவில்லை.

இளைஞர்களை விட்டு விட்டு புறப்பட்ட இந்த பஸ் சனி இரவு கனகராயன் குளத்தில் நின்றுவிட்டு, நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. (இ-எ)

## பரப்புக்கட..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலேயே கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

பல சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

இதனிடையேநேற்றும் தொடர்ந்து மாந்தை, 9ஆம் கட்டை, உயிலங்குளம் பிரதான வீதிப் பகுதிகளில் சிப்பாய்களை எதிர்த்து புலிகள் கடும் சண்டையிட்டனர்.

ஹெலிக்கொப்டர்களும் இப்பகுதியில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டன. (இ-10)

## வல்வை ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உதயன் இதழில் பிரத்தியேகமாக வெளியானது தெரிந்ததே.

கொழும்பு இரகசியப் பொலீஸ் அலுவலகத்தின் 4ஆம் மாடியில் இடம் பெற்ற துயர் அனுபவங்களை கிருஷ்ணபிள்ளை துரைராசா சுவிஸ் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

சுவிஸில் இருந்து பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்ட வேறு சில தமிழ் இளைஞர்களும் சுவிஸ் பத்திரிகையாளரைச் சந்தித்து தங்கள் அனுபவங்களைத் தெரிவித்தனர்.

இதனிடையில் சுவிஸ் பத்திரிகையாளரான ஹியுகோ ஜெமெயின் யாழ் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஷெல் தாக்குதல்களின்போது இடம் பெற்ற சேதங்களைப் பார்வையிட்டார்.

இரண்டு நாள் விஜயத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு, ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் ஆகியோரை [illegible] பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். (இ-எ-5)

## யாழ்நகரை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிடம் தெரிவித்தார் என்று சுவிஸ் பத்திரிகையாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

விமானம் மூலம் வந்த இப் பத்திரிகையாளர் வடபகுதிப் பிரிகேடியரைச் சந்தித்திருந்தார்.

வட பகுதியில் குறிப்பாக கோட்டை முகாமைச் சுற்றிய பகுதிகளில் நடைபெறும் தாக்குதல்களால் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்!

இது ஏன் என்று தாம் கேட்டபோதே பிரிகேடியர் இப்படியாகப் பதில் அளித்தார் என சுவிஸ் பத்திரிகையாளர் ஜெமெயின் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தெல்லிப்பளையில் இன்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப் 9

எரிபொருள் தடையை எதிர்த்தும் தமிழர் கொலைகளைக் கண்டித்தும் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று இன்று திங்கட்கிழமை தெல்லிப்பளையில் நடைபெறுகிறது.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் ஏனைய பொது அமைப்புக்களுடன் இணைந்து இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய முன்றலில் இருந்து காலை9மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடையும். (இ-5)

## யாழ் இந்து அபிவிருத்திச் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்'பெப்.9

யாழ் இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

அதிபர் திரு. ச. பொன்னம்பலம் தலைமை வகிப்பார். (இ-எ)

## முள்ளைத்தீவில் ஷெல் தாக்குதல்

யாவ்ப்பாணம், பெப் 9

முல்லைத்தீவில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இதனால் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

மூன்றுபேர் காயமடைந்தனர்

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து சிப்பாய்கள் வெளியேறி வருகையில் போராளிகள் தாக்குதல் நடத்தினர்

இதனை அடுத்தே முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இந்த ஷெல் தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் சிறுவன் ஒருவன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது பெயர் எஸ் இராஜேஸ்வரன் வயது 7. முல்லைத்தீவைச் சேர்ந்தவர் (இ-10)

## திரைப்பட தயாரிப்பு வீழ்ச்சி!

சென்னை, பெப். 9

தென் இந்தியாவில் கடந்த ஆண்டு திரைப்படங்கள் தயாரிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

1985 இல் 632 திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு திரையிட அனுமதி பெறப்பட்டது.

1986 இல் 577 திரைப் படங்களே தயாரிக்கப்பட்டன. (இ - எ)

## சிங்களவருக்கு அரசு பாதுகாப்பு

கொழும்பு,பெப்,9

அம்பாறை, பொத்துவில் பகுதிகளில் உள்ள சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பகுதிகளுக்கு விசேட ஆயுதப் படைப்பிரிவு ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது. (இ-எ)

## மாந்தோட்டம் கிராமத்தில் புதிய முகாம்

கொழும்பு,பெப்.9

கடந்த வாரம் போராளிகளின் தாக்குதலுக்கு இலக்கான மாந்தோட்டம் கிராமத்தில் ஆயுதப் படை முகாம் ஒன்று அமைக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அச்சம் காரணமாக அக்கிராம மக்கள் இடம் பெயர்ந்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

அராலித்துறையில் இப்படியும்நடந்தது

## பிரயாணிகள் கரையில் பொதிகள் படகில்

ஏராளமான தீவுப் பகுதி பிரயாணிகள் வள்ளம் இன்றிக் கரையில் நிற்க பொதிகள் மாத்திரம் சில வள்ளங்களில் பிரயாணம் செய்த சம்பவம் அராலித்துறையில் சமீபத்தில் இடம் பெற்றது

சம்பவம்பற்றி கூறப்படுவதாவது.

சம்பவதினம் வழமையிலும் பார்க்க பெரும் எண்ணிக்கையான மக்கள் அராலித்துறையில் வள்ளங்களுக்காக காத்திருந்தனர்.

ஓய்ந்த வேளை சில வள்ளக்காரர்கள் பொதிகளை மாத்திரம் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

சில வள்ளக்காரர்கள் மோட்டோர் சைக்கிள்களையும் ஏற்றிச்சென்றனர் இதனைக்கண்ட பிரயாணிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பின்னர் சில இளைஞர்களின் முயற்சியால் பிரயாணிகளுக்கான வள்ளங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் அக்கரைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (இ-16)

## மகாபொல...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களுடன் யாழ் வந்து சேர்ந்தது

இந்தப் பயணிகளுக்கு ஆனையிறவு தடைமுகாமில் குளிர்பானங்கள் வழங்கப்பட்டது

ஆனையிறவுக்கு அப்பால் இருந்து வேறு பஸ்கள் எதுவும் நேற்றிரவு வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. (ஒ-10)

## கிளிநொச்சி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் வந்து சேர்ந்தன.

கிளிநொச்சி ஊடாக எந்தவித வாகனப் போக்குவரத்தும் நடைபெறக் கூடாது எனவும் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இந்த உத்தரவு இன்று தொடர்ந்தும் முகாம்களில் தீவிரமாகக் கவனிக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது

இதனை அடுத்து வீதிப் பெர்மிட்டும் நேற்று முதல் சிப்பாய்களினால் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது (இ-10)

## வின்ஸர் கலையரங்கில் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.9

மக்கள்வங்கி ஊழியர், அடகு வைத்தோர் சங்கம், கூட்டுறவு ஊழியர், வங்கி வாடிக்கையாளர் சங்கம் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் இன்று வின்ஸர் கலையரங்கில் காலை 10மணிக்கு நடைபெறும். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org